## கம்பஹா மாநகர சபை
## கம்பஹா மாவட்டம்

### 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014 சனவரி 09 ஆந் திகதி சபையின் நகர ஆளுனருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கம்பஹா மாநகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் ரூபா 1,500,000 செலவிடப்பட்டு 2 உழவு இயந்திரங்களும் 2 டிரேலர்களும் கொள்வனவு செய்யப்படுவது நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முற்கொடுப்பனவு மீதியில் ரூபா 62,833 கூட்டுத்தொகைப் பெறுமதியான 6 மதிப்பிழந்த காசோலைகள் மாற்றப்படாதிருந்தன.

(இ) இடர் முகாமைத்துவ அதிகாரசபையிலிருந்து கிடைக்கப்பெற்ற 02 அங்குல், இயந்திரத்துடனான ஓர் படகு மற்றும் மின்பிறப்பாக்கியின்

பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 35,500,000 பெறுமதியான 3 செயற்பாடுகள் தொடர்பாக உடன்படிக்கையிடப்பட்ட பிணைப்போ அல்லது எவ்வித செயற்பாடும் மேற்கொள்ளப்படாதிருக்கையில் அவை வருட இறுதியில் கடன்கொடுத்தோராகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 134,756,437 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,986,801 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,953,942 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆளுனரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டவை | உள்ளபடியானவை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 47,396 | 36,762 | 27,291 |
| (ii) | வாடகை | 13,332 | 12,809 | 18,095 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,208 | 1,292 | 546 |
| (iv) | ஏனைய வருமானம் | 162,605 | 150,027 | 58,645 |

### 2.2.2 வீதவரி

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி ரூபா 25,840,902 மீதியில் ரூபா 5,000 இற்கு மேலான மீதிகளின் பெறுமதி ரூபா 2,203,399 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 ஏனைய வருமானம்

நிலுவையான ஏனைய வருமானம் ரூபா 123,591,651 தொகையில் கம்பஹா தலைமை அலுவலகத்திற்கு உரித்தான அதிகாரப்பகுதியில் மாத்திரம் 1 – 3 வருட காலத்திற்கு இடைப்பட்ட காலத்தில் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,950,334 ஆகவும் 3 - 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,107,844 ஆகவும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,728,852 ஆகவும் காணப்பட்டது.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பஹா நீதிமன்றத்தில் நீதிமன்றத் தண்டப்பணம் 2007 ஆம் ஆண்டு வரை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.3 விளைவற்றதும் குறைவாகப் பயன்படுத்தப்படும் பௌதீக வளங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையிடம் உள்ள 06 ஆண்டுகளுக்கு மேல் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டவற்றைக் கைதவிர்ப்பதற்கோ அல்லது பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது உக்கிய நிலையில் காணப்பட்ட 6 வாகனங்களின் பெறுமதி ரூபா 909,100 தொகையாகவும் கைவிடப்பட்டிருந்த காலம் இனங்காணப்பட முடியாத இயந்திரங்களின் பெறுமதி ரூபா 789,760 ஆகவும் காணப்பட்டது.

(ஆ) 2010 சனவரி 26 ஆம் திகதி முதல் ஓட முடியாத நிலையில் காணப்பட்ட நீர்த்தாங்கி 2013 யூன் 10 கணக்காய்வுத் திகதி வரையிலும் பழுதுபார்க்கப்படாது பாதுகாப்பற்ற நிலையில் சபை வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) சபையிடமிருந்த கடைகளில் 45 கடைகள் கேள்வி கோரப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர ஆளுனரால் பயன்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் திடீர் விபத்திற்கு உட்பட்டு விரைவாக பழுதுபார்க்கப்படுவதற்கான இயலுமை இருந்தும் பழுதுபார்க்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நகர ஆளுனரின் சொந்த வாகனத்தைப் பயன்படுத்தியதன் காரணமாக இதற்காக ரூபா 675,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே தீயணைப்பு பிரிவிற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள கப் வண்டி நகர ஆளுனரின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக 6275 கிலோ மீற்றர் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 103,088 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது நகர உறுப்பினர்களுக்கு நகர ஆளுனரின் அங்கீகாரத்தில் மைல் கூலியாக ரூபா 948,350 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் தொழில் நிர்வாகிகளுக்கு உரித்தான கடமையான பன்முகப்படுத்தப்பட்ட

செயற்திட்ட கண்காணிப்பு, உள்ளூராட்சி குறித்த பணிக்குரிய செயற்திட்டக் கண்காணிப்பு, வீதி விளக்கு பராமரிப்பு கண்காணிப்பு, வீதி மற்றும் வடிகால் முறைமை பராமரிப்பு போன்ற கடமைகளை மேற்கொள்வதற்காக இம் மைல் கூலி செலுத்தப்பட்டதாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து முன்னரே ஓர் திட்டம் சபையால் தீர்மானிக்கப்படவோ அல்லது மேற்கொள்ளப்பட்ட கடமைகள் தொடர்பில் செயலாற்றல் அறிக்கை ஒன்று சபைக்கு ஒப்படைக்கப்பட்டோ இருக்கவில்லை.

(இ) வெளி வாகனம் ஒன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு 2012 சனவரி முதல் 2013 யூன் வரை செலவிடப்பட்ட ரூபா 5,569,356 தொகையில் உழவு இயந்திரங்களும் முச்சக்கர வண்டிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் சபை நிதியம் வெளியேறுவதைத் தடுத்து அவற்றை எதிர்வரும் நடவடிக்கைகளின் போது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கும் முடிந்திருக்கும்.

## 2.5 அதிகாரப்பொறுப்பற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு பஸ் தரிப்பிடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 51 கடைகள் தொடர்பாக பிரதம மதிப்பீட்டாளரின் அறிக்கை 2008 மே 23 ஆம் 2008 யூன் 23 ஆம் திகதிகளில் சபைக்கு வழங்கப்பட்டிருந்தன. புதிய மதிப்பீட்டு வாடகையைச் செலுத்துமாறு வாடகை செலுத்துனர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்ப்புகள் எழலாம் எனக் குறிப்பிட்டு மதிப்பீட்டு வாடகை குறைக்கப்பட்டு புதிய மதிப்பட்டின் படி பட்டியலிடப்பட்டு காசேட்டிலிருந்து பதிவழிக்கப்பட வேண்டும் என பொதுக் கூட்டத்தின் அங்கீகாரத்தில் 2008 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் 2009 யூலை 31 வரையான காலப்பகுதிக்கு உரித்தாக ரூபா 1,768,500 தொகை 2009 ஆம் ஆண்டின் போது 17 ஆம் இலக்க நாட்குறிப்புப் பதிவின் மூலம் பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக மாநகர கட்டளைச் சட்டத்தின் 266(அ) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 2013 மார்ச் 04 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் எல்ஜீடீ/06/02/04/எம்06 ஆம் இலக்க கடிதத்தின் படி முறையான நடைமுறைக்கு மாறாக அவ்வாறு

செயற்படுவது தொடர்பாக காரணங்களை தெளிவுபடுத்துமாறும் தாமதமின்றி உரிய பணத்தை அறவிடப்பட வேண்டிய காசாக பதிவேடுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டு இதன் படி எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்குமாறும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2013 யூன் 28 ஆம் திகதி வரையிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 மார்ச் 21 ஆம் திகதிய எல்ஜீஓ/05/19 ஆம் இலக்க மேல் மாகாண பிரதம அமைச்சரின் கடிதத்தின் (ஆ) பந்தியின் பிரகாரம் நகர ஆளுனரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்குப் பயன்படுத்தப்படும் ஆகக் கூடுதலான எரிபொருளின் அளவு எது என்பது குறித்து முன்னரே சபை அங்கீகரித்த தீர்மானத்தை பரிந்துரைப்பின் மூலம் தீர்மானிக்க வேண்டியதாகக் குறிப்பிட்டிருந்த போதிலும் அவ்வாறு முன்னங்கீகாரம் இன்றி 2012 ஆம் ஆண்டின் போது நகர ஆளுனரின் வாகனத்திற்காக ரூபா 1,205,663 தொகையான எரிபொருள் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

## 2.6 யக்கல கடைத் தொகுதியின் நிர்மாணிப்பு

இக் கடைத் தொகுதியின் நிர்மாணிப்பிற்காக நகர சபைக்கும் ஒப்பந்தக்காரருக்கும் இடையே 2008 திசெம்பர் 22 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி உடன்படிக்கையிடப்பட்ட தொகை ரூபா 96,960,742 (வரி அல்லாத) ஆகக் காணப்பட்டதுடன் உடன்படிக்கைக் காலம் 9 மாத காலமாகக் காணப்பட்டது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்வுத் தினமாகிய 2013 யூன் 28 ஆம் திகதி வரையில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு 3 ஆண்டுகளுக்கும் மேலான காலம் கடந்திருந்த போதிலும் மிகக் குறைவான அளவு வேலையே பூர்த்தியடைந்திருந்தது.

(ஆ) 20% முற்பணத் தொகையுடன் 5 சந்தர்ப்பங்களின் போது சபையால் ரூபா 43,497,091 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. பல வருட காலமாக இச் செயற்திட்டம் தாமதமான காரணத்தால் ஏற்கப்பட்ட செலவினத்திலிருந்து முறையான பயன்பாடு பெறப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 20% முற்பணத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கிப் பிணை 2010 பெப்ரவரி 24 ஆம் திகதி முடிவுற்ற போதிலும் 2013 யூன் 28 ஆம் திகதி வரையிலும் செல்லுபடிக் காலம் நீடிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிர்மாணத் துறையின் தாமதத்தின் காரணமாக எஞ்சிய வேலைகளை முடிவுறுத்துவதற்காகவும் 20% ஆன விலை அதிகரிப்பிற்கும் 2012 பெப்ரவரி முதல் விலைத் தளம்பலின் படி கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் சபை தீர்மானித்திருந்ததுடன் இதன் படி 20% ஆன விலை அதிகரிக்கப்பினால் ரூபா 1,037,027 தொகையும் விலைத் தளம்பல் ரூபா 160,927 தொகையுமாக ரூபா 1,197,954 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டமை சபைக்கு நேர்ந்த நட்டமாக அவதானிக்கப்பட்டது.

(உ) 2012 ஏப்ரல் 5 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் எஞ்சிய வேலைகளுக்காக குறித்த காலத்துடன் புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படுவதற்கு சபை தீர்மானித்திருந்த போதிலும் 2013 யூன் 28 ஆம் திகதி வரையிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 யூன் 28 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் காணிகள் பற்றைகள் முளைத்துள்ளதாகவும் முதலாம் மாடி நிர்மாணிக்கப்படுவதற்கிருந்த கடைகளின் கம்பிகள் கள்வர்களால் வெட்டிச் செல்லப்பட்டிருந்தமையும், நிர்மாணிக்கப்பட்ட கடைகளில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளமையும் நிர்மாணிக்கப்பட்ட கடைகள் பல்வேறு மோசடிகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இடமுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது.

## 2.7 அலுவலக நடவடிக்கைகள் கணனி மயமாக்கல்

சபைக்குத் தேவையான அலுவலக நடவடிக்கைகள் கணனி மயமாக்கப்படுவதற்காக தேவையான மென்பொருள் முறைமையைப் பெற்றுக்கொள்வதற்காக ஓர் தனியார் நிறுவகம் ஒன்றிற்கு ரூபா 1,637,000 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9 ஆம் பந்தியின் படி கேள்வி மனுதாரருக்கு முறைப்படியான ஏற்புக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.8 ஆம் பந்தியின் படி செயலாற்றல் பிணை வைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களின் படி மென்பொருள் கொள்வனவு செய்யப்படுவதற்கு உடன்படிக்கை ஏற்படுத்தப்படுகையில் 25% மும், மென்பொருள் ஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து 25% மும், பயிற்சி முடிவுற்றதை அடுத்து 50% மும் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2012 திசெம்பர் 31 வரை ரூபா 1,318,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. முறைமை ஸ்தாபிக்கப்படுவதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.12.12 ஆம் பந்தியின் படி வேலை முடிவுறுத்துவது தொடர்பாக ஓர் சான்றிதழ் இல்லாதிருந்ததுடன் 2013 யூன் 28 கணக்காய்வுத் தினம் வரையிலும் உரிய உத்தியோகத்தர்கள் பயிற்றப்பட்டமையும் அவதானிக்கப்படவில்லை. இதன் படி பயிற்சியின் பின்னர் செலுத்தப்பட வேண்டிய பணம் பயிற்சிக்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட நாள் முதல் இது வரை ஒரு வருடத்திற்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் சபையின் கணனி மென்பொருள் செயற்பாடு வீத வரி மற்றும் ஏனைய வருமானத்திற்காகவே மாத்திரமாகும். மற்றைய பிரிவின் செயற்பாடு ஆரம்ப கட்டத்தில் காணப்பட்டது.

**2.8 வாகனப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையிடம் 42 வாகனங்களைக் கொண்ட குழாம் காணப்பட்டதுடன் அவற்றில் ஓட்டத்தில் ஈடுபடாத 10 வாகனங்கள் 6 ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) வாகனங்களுக்குப் பொறுப்பான ஓர் உத்தியோகத்தர் இல்லாதிருந்ததுடன் ஒவ்வொரு பிரிவுகளாலும் பல்வேறு செயற்பாடுகளுக்காக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் முறையான உள்ளகக் கட்டுப்பாடு ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்பை மேற்கொள்ளல்

### (அ) குப்பைகளை அகற்றல்

2012 ஆம் ஆண்டின் போது குப்பைகளை அகற்றுவதற்காக ஓர் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 5,008,922 தொகையும், குத்தகைக் காணிக்காக ரூபா 700,000 தொகையும் குப்பைகளை இடுவதற்காக ரூபா 3,825,000 தொகையுமாக ரூபா 9,533,922 வெளித்தரப்பினருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக இச் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட சபையின் வாகனங்களிற்காக ரூபா 3,357,887 தொகையான எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவினமும் வாடகைக்குப் பெறப்பட்ட வாகனத்திற்காக ஒரு வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 3,970,570 ஆகவும் காணப்பட்டது.

(ஆ) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 130 ஆம் பிரிவின் பிரகாரம் குப்பை, சபையின் சொத்தானமையால் இது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டு குப்பை சேரும் இடங்களிலேயே வகைப்படுத்தப்பட்டு அவற்றை வகைப்படுத்தப்பட்ட பொருட்களை ஏற்ற வகையில் மீள்சுழற்சியிடுவதற்காகவோ அல்லது சேதனப்பசளை உற்பத்தியாக்குவதற்கோ பயன்படுத்தப்படுவதற்கு சபை தவறியமையால் சபையின் சொத்தான குப்பையை அகற்றுவதற்காக மேற்குறித்த வகையில் பாரிய தொகையைச் செலவிடப்படுவதற்கு சபைக்கு நேர்ந்தது.

## 2.10 பதவியணி நிர்வாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்கள் / மிகை |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 05 | 05 | - |
| இரண்டாம் | 128 | 106 | 22 |
| ஆரம்பம் | 187 | 139 | 48 |
| ஒப்பந்தம் | - | 77 | - |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நகர ஆணையாளர் பதவி 2005 சனவரி மாதம் முதல் வெற்றிடமாகிக் காணப்பட்டதுடன் இதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் 06 மாதங்களுக்கு ஒரு தடவை சேவையை நீடித்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டிருந்தார்.

(ஆ) இரண்டாம் தரத்தில் வருமானப் பரிசோதகர் பதவி மற்றும் தீயணைப்புப் பிரிவின் 10 பதவிகளின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ஆரம்ப நிலையில் உள்ள பதவியணியினருக்காக ஒப்பந்த.். அமைய அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்காக 77 பேருக்காக ரூபா 10,259,980 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கடமைக்குச் சமூகமளித்தமை தொடர்பில் வருகைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. சுகாதாரப் பிரிவின வேலை ஒப்படைப்பு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிராத ஊழியர்களுக்காக பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தமை மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

| **மாதம்** | **பதவியணி** | **நாட்கள்** |
|---|---|---|
| 2012 சனவரி | 21 | 164 |
| பெப்ரவரி | 22 | 193 |
| செப்தெம்பர் | 16 | 52 |

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்து முகாமைத்துவம்

(உ) வாகனப் பயன்பாடு